**(Corrected)**

**May 12, 2015**

# ஏட்டறிவை விட அனுபவ அறிவு உயர்ந்தது.

ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது. மனிதன் வளரும்பொழுது தன்னையறியாமல் வாழக் கற்றுக் கொள்கிறான். நடப்பது, உண்பது, பேசுவது போன்றவை எளிமையான அத்தியாவசியமான செயல்கள். கடையில் போய் பணம் கொடுத்து ஒரு பொருள் வாங்குவது, ஆற்றில் போய் குளிப்பது முக்கியம். பொருள் வாங்கும் பொழுது ஏமாற்றப்படுவோம். வாங்கிய பொருளை எடுத்து வரப் பயில வேண்டும். படித்தால் பாஸ் செய்ய வேண்டும், விளையாடினால் ஜெயிக்க வேண்டும், படிப்பு முடிந்தால் வேலைக்குப் போக வேண்டும், திருமணமாக வேண்டும். அவை பெரிய முக்கிய கட்டங்கள். பிறருடன் பழக கற்க வேண்டும். அது அனைவருக்கும் அவசியம். ஒருவர் பொய் சொல்வது தெரியாவிட்டால், ஏமாறுவோம், வாழ முடியாது. இது போன்ற செயல்களை அனுபவமாக அறிவதால் அறிவு தெளிவானது. பூகோளம், வரலாறு, விஞ்ஞானம் படித்தால் புத்தகம் கூறுவதை அறிகிறோம். கணக்குப் போடக் கற்றுக் கொள்கிறோம். ஏட்டறிவுக்கு முக்கியம் உண்டு. ஆனால் முழுமையில்லை. அனுபவ அறிவுக்கு முழுமையுண்டு, பயன்படும். B.A. பாஸ் செய்வதால் அழுகாத பழம் வாங்கத் தெரியாது. பிஞ்சு காய்கறி, சுவையான பழம் வாங்க அனுபவம் தேவை. இவை எளிய செயல்கள். திருமணம், வேலை சொத்து வாங்குவது பெரிய வேலை. எலக்ஷனில் நிற்பது மிகப் பெரிய வேலை. மனை மலிவாக வருவதை வாங்கியபின் அது பள்ளம் எனத் தெரிகிறது. பிராமிசரி நோட்டில் சாட்சி போட்டபின் கோர்ட் பணம் கேட்டு சம்மன் அனுப்புகிறது. அனுபவமில்லாமல் தெரிந்து கொள்ள முடியாத அறிவு. வாங்கிய புத்தகத்தை திருப்பத் தரும்படிக் கேட்டால் வாங்கவேயில்லை என்கிறான். கோபம் வருகிறது, புத்தகம் போயிற்று, படித்த ஏராளமான புத்தக அறிவு பயன் தரவில்லை. டைரக்டர் நெருங்கியவர், தானே வந்த பிரமோஷனைத் தரவில்லை, வாழ்க்கையே பாழாகி விட்டது. பெண்ணுக்கு மெடிகல் காலேஜ் இடம் கிடைத்து பட்டம் பெற்றபின் அவர்கள் ஜாதியில் அவளைக் கட்டிக் கொள்ள எவரும் முன் வரவில்லை என்றால் இந்த அறிவு ஏட்டறிவால் வராது. புதிய நண்பனிடம் 10 ஆண்டிற்கு முன் பெயிலான விஷயத்தைக் கூறியதால் சுட்டிக் காட்டி அழ வைக்கிறான். இனி என்ன செய்வது பரிட்சையில் Ist கிளாஸில் பாஸ் செய்ததால் வேலை கிடைத்து விடாது. பெண் சுலபமாக அமையாது. பயிற்சி, அனுபவம், எச்சரிக்கை, பதம், பக்குவம் தேவைப்பட்ட விஷயங்களை ஏட்டறிவு தராது. கோள் சொல்வதைக் கேட்டுக் கொள்ளும் அதிகாரி தன் மீது மேலதிகாரிக்குக் கோள் போகும் என அறிய மாட்டார், "நான் கேட்டுக கொள்ளாவிட்டால் எப்படி என் மீது கோள் சொல்வதைத் தடுக்க முடியும்" என நினைப்பார். Foot ball விளையாடி தோற்றவுடன், எப்படியும் அடுத்த முறை இவர்களைத் தோற்கடிக்க வேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டால் அடுத்த முறை பெரும் தோல்வி வருகிறது. வந்த தோல்வி நம் முடிவால் வந்தது எனத் தெரியாது. தோற்றபின் விளையாடக் கற்றுக் கொள்வது அவசியம் என அனுபவத்தாலும் எளிதில் கற்க முடியாது. பேசும் பொழுது குறுக்கே பேசக்கூடாது என்று பாட புத்தகம் கற்றுத் தராது. மரியாதை, நல்ல பழக்கம் பொறுமை படிப்பால் வராது. அண்ணன் தம்பி சண்டை ஒருவன் அடுத்தவனைக் கடித்து விட்டான், அவன் உறவினர் வீட்டிற்கு ஓடிப் போனான். அந்த வீட்டு மாமாவுக்கு பெண் உண்டு. அவர் பையனை அழைத்து வந்து அடுத்த மாதம் கல்யாணம் செய்து விட்டார். கடித்தவனுக்கு கல்யாணமாக 17 வருஷமாயிற்று. என்ன புரியும்? எப்படிப் புரிந்து கொள்வது? ஏட்டறிவு நிச்சயமாக இங்கு உதவாது. பதவியிலிருப்பதால் எதிரியை சமாதி கட்டி விட்டு மறு காரியம் பார்ப்பதாக பறை அறிவித்த தலைவர் அறியாதது "வாக்கு பலிக்கும்" என்பது. சமாதி கட்ட முனைந்தார் பதவி போய் விட்டது. வாக்கு பலிப்பது சொல்லும் நோக்கால் என்பதை உலகம் அடிபட்ட பின்னரே அறியும். பட்டால் தான் தெரியும் என்ற அறிவு இவ்வகையைச் சேர்ந்தது. I$^{st}$ Class I$^{st}$ Rank வாங்கி விட்டான். குமாஸ்தா வேலைக்குப் போனான். கல்லூரி ஆசிரியர் வேலைக்குப் போகத்

தோன்றவில்லை. எடுத்துச் சொன்னபின் அந்த வேலைக்கு மாறினான். I[st] கிளாஸும் I[st] ரேங்கும் ஏட்டறிவு. அனுபவம் தரும் அறிவில்லை.

சிங்கப்பூரைப் பற்றிப் படித்தால் விவரம் தெரியும். அது ஏட்டறிவு. அது சிங்கப்பூரைப் போய்ப் பார்த்ததாகாது. தவம், துறவறம், யோகம், ஆசனம், பிராணாயாமம் ஆகியவற்றைப் பற்றி ஆர்வமாகப் படித்து முழு ஞானம் பெற்றவர் உண்டு. பிராணாயாமம் செய்தவர் வியாதியைக் குணப்படுத்துவார். அது அனுபவம். படிப்பு அதற்குப் போதாது. ஷெர்லக் ஹோம்ஸ் கதையில் வாட்சன் அவருடனேயே இருந்தாலும், எல்லாவற்றையும் பார்த்தாலும், ஹோம்ஸ் சொல்லிக் கேட்டாலும் அவராலும் அடுத்த பிரச்சினையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும், கவிபாடும் என்பது உண்மை. கம்பனைப் போல் பாடாது என்பதும் உண்மை. கோர்ட்டில் ஜட்ஜ், வக்கீல், கட்சிக்காரன், குமாஸ்தா, வக்கீல் குமாஸ்தா, புரோக்கர் என்பது உண்டு என்பது போல் ஆஸ்பத்திரியில் டாக்டர், நர்ஸ், ஆர்டர்லி, மருந்து கடைக்காரன், மருந்து கடை குமாஸ்தா வரை அனைவருக்கும் பல விஷயங்கள் ஏராளமான விஷயங்கள் தெரியும். அவை அனைத்தும் முழுமையான விஷயமாக இருக்காது. Green Revolution, இரண்டாம் உலகப் போர், French Revolution இவற்றை நிதர்சனமாகக் காண்கிறோம். அவை பெரிய விஷயங்கள். மிகச் சிறிய விஷயங்களிலும் ஏட்டறிவு, அனுபவ அறிவு மாறுபாடு தெள்ளத்தெளிய எழும் நேரங்கள் ஏராளமாக உள்ளன. 3 ஆம் வகுப்பும் பாஸாகாத பையனை ஒரு ஆசிரியர் அவன் தடையைக் கண்டு விலக்கினார். அவன் முதல் மாணவனாக வந்தான். 3ஆம் வகுப்பு, 4ஆம் வகுப்பு குழந்தைகட்குத் தகப்பனார் போட்டுக் கொடுக்கும் வீட்டுப்பாடம் தவறு என ஆசிரியர் வகுப்பில் கூறுவது சகஜமாயிற்று. SSLC அல்லது B.A. படித்த தகப்பனார் சிறு குழந்தைகள் பாடமும் அறியாதவர் என்பதைப் பல தகப்பனார்கள் அறிவார்கள். ஏட்டறிவு பயனற்றது என்றாலும் ஏட்டறிவையும் பெற முடியாத பட்டம் தகப்பனார் பெற்றது என்பதாகும். வேதம் உயர்ந்தது. அதுவே யாகம், யக்ஞம். அதைப் படிப்பவர்கள் மனப்பாடம் செய்கிறார்கள். பொருளையும் அறிவதில்லை. பொருளை அறிவதும் ஏட்டறிவே அது மோட்சம் தராது. பொருளையும் அறியாமல் படிப்பதும் பலன் தரும் என்பது நம் பரம்பரை. நாளாவட்டத்தில் முதல் சுலோகமும் கடைசி சுலோகமும் சொல்வது என வழங்குகிறது, எல்லாப் பொருளையும் அர்த்தபுஷ்டியுடன் அறிவதும் ஏட்டுப் படிப்பே, அதற்குப் பலனில்லை என்பது அனுபவம். சாப்பாடு கூடப் போடாது. நான் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறேன். வைத்தியம் செய்யவில்லை என்பது கேலிக்கூத்து. நடனம் சங்கீதம் பயின்றேன் நடனமாடியதில்லை, பாடியதில்லை என்பது கிடையாது. பூரண யோகத்தை ஏட்டறிவாகவும் எவரும் பெறவில்லையென அது பெயர் வாங்கியது. பாரத ரத்தினம் விருது ஏற்படுத்தி முதலில் சர் சி.வி. ராமன், ராஜாஜி, ராதாகிருஷ்ணனுக்குக் கொடுத்தார்கள். அதைப் பெறும் தகுதி பெரியது என்பதால் அதைப் பெறும் பெரு மக்களை அதன்பின் காண முடியவில்லை. அப்படிக் கண்டவர்களில் விஸ்வேஸ்வரய்யா, பகவன் தாஸ் ஆகியவர். பகவன் தாஸ் இந்தியாவில் பெரிய சமஸ்கிருத புலமை பெற்ற பண்டிதர். அவர் மகன் சென்னை கவர்னராக இருந்தார். ஸ்ரீ பிரகாசா எனப் பெயர். பகவன் தாஸ் பனாரஸ் இந்து சர்வகலாசாலையை ஸ்தாபித்தவர். பெரிய இலட்சியவாதி, தேச பக்தர். புலமைக்கு எடுத்துக்காட்டு. அவர் “ஆர்யா படித்தேன், விளங்கவில்லை” என்றாராம். எப்படி மோட்சம் பெறுவது எனத் தெரிவதால் மோட்சம் பெற முடியாது. தெரிவது ஏட்டறிவு, பெறுவது அனுபவம். மேல் நாட்டுப் படிப்பில் பெரும் பகுதி ஏட்டறிவுடன் நின்று விடும். பூகோளம் படித்தால் அந்த இடங்களைப் போய்ப் பார்க்கலாம். விஞ்ஞான சோதனையைப் படித்தால் செய்து பார்க்கலாம். வரலாறு படித்தால் சோழ ராஜ்யத்தைப் போய்க் காண முடியாது. ஏட்டறிவுக்கும் சிறப்புண்டு. சிறப்பான சிறப்பும் உண்டு. நடைமுறைக்கு அதுவும் போதாது. அனுபவ அறிவிலும் பல கட்டங்கள் உண்டு. மேஜை செய்வதிலும், வைரம்

தீட்டுவதிலும் எல்லாத் துறைகளிலும் இது உண்டு. சங்கீதம், சமையல் ஆகிய இரண்டிலும் சிறப்பாக உண்டு. சங்கீதம் உச்சஸ்தாயியை அடைந்தால் கரகோஷம் விண்ணைப் பிளக்கும்.

இந்தியாவில் 22 விவசாயப் பல்கலைக்கழகங்கள் உள்ளன. 4 வருஷத்தில் மாணவர்கள் விவசாயத்தை விஞ்ஞான ரீதியாக மண், விதை, பயிர், நீர், உழவு, சீசன் என எல்லா அம்சங்களையும் விவரமாகப் பயில்கின்றனர். எங்கும் ஓய்வு பெறும் வரை ஒரு ஏக்கர் பயிரிடுவதில்லை. ஏட்டுச் சுரைக்காய்க்கு இவர்களை விட சிறந்த உதாரணம் கிடையாது. கிண்டி இன்ஜினீயரிங் காலேஜ் automobile engineer லண்டனுக்குப் போய் படித்தார். அங்கு ஒரு நாள் அவரை காரை எடுக்கச் சொன்னபொழுது “எனக்கு கார் ஓட்டத் தெரியாது” என்று கூறி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். தேவனுடைய கதையொன்றில் ஜோஸ்யர் மனைவி தன் ஓடிந்த வளையலை சரி செய்து தரவில்லையென கணவனிடம் கோபப்பட்டு, “நான் எப்பொழுது போவேன் என்று ஜோஸ்யம் சொல்லுங்கள்” என்றாள். “உங்கள் ஜோஸ்யத்தில் நான் உங்களுக்கு ஒத்து வராது என்று தெரியாதா?” எனக் கேட்கிறாள். அப்படியெல்லாம் ஜோஸ்யம் சொல்ல முடியுமா? என்று பெரிய ரகஸ்யத்தை என் ஜோஸ்யம் ஏட்டுச் சுரைக்காய் – வெளியிடுகிறாள். பூரண யோகமோ அதன் கருவியான சமர்ப்பணமோ ஏட்டுச் சுரைக்காயாக முடியாது. அன்பர்களிடையே பணம், அந்தஸ்து, உத்தியோகம் முக்கியமாகக் கருதப்படுகிறது. அவர்களால் சமர்ப்பணம் செய்ய முடியாது. ஒரு அமெரிக்கப் பெண் மூன்று பெண்களைப் பெற்றவர். விவாக ரத்து செய்து 1970ல் ரூபாய் 20,000 மாதம் பணம் பெறுபவர். அதனால் அனைவரும் அவரை அப்பணத்திற்குரிய மரியாதையுடன் நடத்துவார்கள். அது சமர்ப்பணத்திற்கு ஒத்து வராது. ஓர் அமெரிக்கர் ஓர் அன்பருடன் தொழில் செய்ய விரும்பி 20,000 ரூபாய் அந்த ஆண்டு கொடுத்தார். பணம் விரயமாகி விட்டபடியால் பணம் பெற்றவர் மறுபடி கவனமாக அதையே செய்தபொழுது மழை, புயல் வந்து வேலை முடியும் தருவாயில் நஷ்டப்படுத்தியபொழுது அன்பர் மூன்றாம் முறை செய்ய முன் வந்தார். பணம் போட்டவர் “உங்கள் மீது எந்த குறையுமின்றி நஷ்டம் வந்து விட்டது. அதனால் அந்த நஷ்டத்தை நானே ஏற்றுக் கொள்கிறேன்” என்றார். அன்பர் “இது பக்தருடைய மனப்போக்கு. அதற்குரிய செயல் வியாபாரமில்லை, உங்கள் கையில் உள்ள அனைத்தையும் சேவைக்குத் தருவது” என்றார். அப்படி அந்த அமெரிக்கரிடம் அன்றிருந்த பணம் $5000 – ரூபாய் 40,000. அவர் தொழிலைக் கைவிட்டு சேவையை ஏற்று தன் பணத்தை காணிக்கையாகக் கொடுத்து விட்டார். இந்த செய்தி அமெரிக்கப் பெண்ணுக்குப் போயிற்று. அவர் சேவா அன்பரைப் பார்க்க விரும்பினார். அமெரிக்கருக்கு அப்பெண் முக்கியம் என்பதாலும் அப்பொழுது தான் சேவைக்கு தன் கைப்பணம் முழுவதும் கொடுத்திருந்ததாலும் சேவா அன்பரை அப்பெண்ணை சந்திக்கும்படி அழைத்தார். அன்பர் மறுத்து விட்டார். அமெரிக்கர் மூன்று நாள் வரை இரண்டு முறை இவ்விருவரையும் மாறி மாறி சந்தித்து தன் முயற்சியை தொடர்ந்தார். அத்துடன் “அப்பெண் உங்களை வந்து சந்திக்க விரும்புகிறார். வீட்டில் சந்தர்ப்பம் சரியில்லை. EB fuse போய் விட்டது. எலக்ட்ரீஷியன் மூன்று நாளாகக் கிடைக்கவில்லை. எந்த நேரம் வருவான் எனத் தெரியாது. அதனால் அவரால் வீட்டை விட்டு வர முடியவில்லை என்ற விளக்கத்துடன் மீண்டும் அன்பரை வரும்படி வேண்டினார். அன்பர் “நான் எவரையும் போய் சந்திக்க விரும்பவில்லை. அது சேவைக்கு உதவாது, தவறு. இனியொரு முறை என்னை எங்கும் அழைக்க மாட்டேன் என்றால் இம்முறை வருகிறேன்” என்றார் வந்தார். அப்பெண் பரிதாபமாக சங்கோஜப்பட்டு மன்னிப்புக் கோரும் வகையில் EB யைப் பற்றிக் கூறினார். “சமர்ப்பணம் செய்தீர்களா?” என்றார் அன்பர். அவர் பெண் “அம்மா எலக்ட்ரீஷியன் வந்து விட்டார்” என்றார். சமர்ப்பணம் ஏட்டுச்சுரைக்காயில்லை. பூரண யோகத்தில் எந்த அம்சமும் ஏட்டுச்சுரைக்காயில்லை!.

Life Response வாழ்வின் எதிரொலி என்று நான் எழுதுவதை உலகமறியும். அது போல் நடப்பதை அனைவரும் அறிவர். இந்தியர் போன்றவர் ஏற்பர். மேல் நாட்டார் ஏற்க மாட்டார்கள். அதை அறிந்து பயன்படுத்தி செயலாற்றுவது அனேகமாக இல்லை. பிரான்சில் 200 ஆண்டுகட்கு முன் போர் நடந்தபொழுது வழக்கமாக எழும் காற்றை நம்பி திட்டமிட்டபொழுது வானம் அமைதியாயிற்று. ஒரு மகானுடைய எலும்புகளைக் கடற்கரையில் கொண்டு வந்தவுடன் காற்று எழுந்தது. பொதுவாக Life Response தானே எழுவது நெப்போலியன் General ஆகவும் Emperor ஆகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது போல். இன்று சூழல் பாதிக்கப்பட்டுள்ளதால் உலகம் மிரண்டு செய்வதறியாதுள்ளது. Life Response சூழலை முழுவதும் திருத்தும், உடனேயும் திருத்தும். கென்னடியை ராஜாஜி சந்தித்து அணுகுண்டு வெடிப்பதை நிறுத்தும்படி கேட்டது அது போன்ற செய்தி. சூட்சும ஞானம் பல உண்டு. அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த ஞானத்தை பெறும் வழியை அறிவதில்லை. வாலி பெற்ற வரம் வாழ்வில் உண்மை. எலக்ஷன், பங்காளிப் போராட்டம், சுதந்திரப் போர் போன்ற சமயங்களில் இந்த உண்மை எழும். உலகம் இவ்வறிவைப் பெற முயல்வதில்லை . அகர வரிசை, அராபிக் நம்பர் (decimal number) ஆகியவற்றை உலகம் அறிந்து பயன்படுத்துகிறது. பல ஆயிரம் ஆண்டுகளாக அவற்றுள் அடுத்த நிலை ஞானத்தை அறிய முயன்றதில்லை. Imitation ஒருவர் செய்வதைப் பார்த்து நாமும் அதனால் பயன் பெறுவதை அனைவரும் அறிவர். பல சமயம் அது பெருவாரியாக செயல்படுவதையும் அறிவோம். ஏட்டறிவால் அது போன்ற அனுபவம் வராது. தேள்கடி மருந்து பல வருஷமாக இருக்கிறது. “இதையென்ன செய்ய?” எனத் தூக்கிப் போட்டவுடன் தேள் கடிக்கும். இது பெரிய அனுபவம். Sears பெற்றது, Marriot பெற்றது, Sloan மூலம் GM பெற்றது, அயகோக்கா மூலம் Chrysler பெற்றது, Stock Market இல் Warren Buffet பெற்றது, அம்பானி பெற்றது, மரத்திலிருந்து விழுந்த மாங்காய் திரும்பப் போனது போல் ஆயிரம் அனுபவங்கள் உள. மனிதன் தானே வருவதைப் பெறுகிறான். அப்படிப் பெறுவது அனுபவம். ஏடு இதை கற்றுத் தராது. நிலம் மனையாவதும், இல்லாத மக்கள் பிள்ளைகள் டாக்டர் வக்கீலாவதும் உலகம் அனுபவிப்பது, ஏட்டால் பெற முடியாது. கோபம், அவசரம், பொறாமையால் எதிரி கை வலுப்பெற்றது நாம் மனமொடிவது நாள்தோறும் நடப்பது. அனுபவம் மக்களுக்கு இவற்றைப் பெற்று தருகிறதா என்பது வேறு. ஏட்டால் இவை பெற முடியாத ஞானம். ஏடு தருவது மிகப் பெரிய ஞானம். இன்று மேல் நாடு பெற்றுள்ள ஞானத்தில் 90 பங்கு ஏடு மூலம் பெற்றது. ஏட்டறிவு சிறியதல்ல. ஆனால் அனுபவ அறிவாகாது. கடன் வாங்கி குடும்பம் என் பாட்டனார் காலத்தில் அழிந்தது. என் தகப்பனாரும் அப்படியே அழிந்தார். நானும் அதையே வாழ்வில் பரிசாகப் பெற்றேன். அனுபவமும் எனக்கு அதைத் தருவதில்லை. ஏடு மட்டும் கொடுத்து விடுமா? மனிதன் தன் குறைகளை அறிவதில்லை. அதே போல் மனிதன் தன் நிறைவை அறிவதில்லை. 1946 முதல் 1954 வரை அன்றைய தமிழக அரசியலில் முதன் மந்திரியை நியமித்தவர் காமராஜ். தானே முதன் மந்திரியாகலாம் என அவர் பிரியப்படவில்லை, தெரியவில்லை. அவர் 10 ஆண்டு பிரபலமான முதன் மந்திரியாக நாட்டை ஆண்டார்.

அறிவு பலன் தருவது அனுபவம் என்ற கொள்கையை 400 வருஷமாகப் பின்பற்றுவது அமெரிக்கா. அன்னை அமெரிக்கர்களைப்பற்றிப் பேசும்பொழுது practical organisation இல் பேர் போனவர் எனவும், பகவான் அமெரிக்கர்கள் எதையும் இயல்பாகப் பெரியதாகச் செய்கிறார்கள் என்றார். இதனால் ஏற்பட்ட பலன்கள் ஏராளம். ஒன்று அமெரிக்கர்கட்கு தினக் கூலி $6 பெற்றபொழுது இங்கிலாந்தில் அது ஒரு ஷில்லிங்காக இருந்தது. ஒரு ஷில்லிங் 75 பைசா. $6 என்பது 24ரூபாய். Paul Johnson அந்நிலையை விவரித்து பணம் தூசாக அமெரிக்கரிடையே வழங்குகிறது என்றார். ஏட்டறிவை விட்டு அனுபவத்தை நாடினால் செல்வம் வெள்ளமாகப் புரளும். வெறும் படிப்பு புலமை தரும், கவியை எழுதும், இலக்கிய சிகரத்திற்கு இட்டுச் செல்லும். இந்தியாவில் உற்பத்தியான 64 சாஸ்த்திரங்களும் ஏட்டறிவு என்றாலும்

நம் பரம்பரைப்படி ஓரளவு செயல்படும் திறமையும் உடையது. எண்ணும் எழுத்தும் ஏடு தரும் அறிவு. திருக்குறளை ஏட்டறிவு எனலாம். அவர் பெற்ற அனுபவத்தை நாம் ஏடு மூலம் பெறுகிறோம். ஏட்டறிவிற்கும் ஏற்றம் உண்டு. சிவபெருமானே நேரில் வந்து பதில் கூறும் நிர்ப்பந்தத்தை நக்கீரன் பெற்ற அறிவு ஏற்படுத்தியது. P.M.S. Blackett Physicist, Royal Society தலைவர், நேரு பிரதமர். பிளாக்கட் பெற்றது அனுபவ அறிவில்லை, சாதனையில்லை. படித்து பெற்ற அறிவு. ஆனால் அது அவரை உலகத்தின் உச்சிக்குக் கொண்டு போயிற்று. பிரதமர் அவரை வரவழைத்து ஆலோசனை செய்கிறார். ஏட்டறிவு அந்த உயரத்திற்குப் போனாலும் நாட்டை ஆள்பவருக்குப் பயன்படும் விஷயங்களைக் கூறும் திறனில்லை அவரிடம். ஏட்டறிவின் மகிமை அது ஊறு செய்யும். பிளாக்கட் “எனக்குத் தெரியாது” என்று மட்டும் சொல்லவில்லை. “Science and Technology உங்களுக்குப் பயன்படும்” என்று தவறான யுக்தியைக் கூறினார். Science and Technology ஒரு நாட்டை முன்னுக்குக் கொண்டு வந்ததை அவர் அறிவாரா? இல்லை. ஏனெனில் அப்படி ஒரு நாடில்லை. அவர் கண்டது என்ன? முன்னேறிய நாடுகளில் Science and Technology தழைத்துள்ளது. முன்னேற்றம் Science யை உற்பத்தி செய்தது. காரியத்தைக் காரணமாகக் கொள்வது தவறு, மூட நம்பிக்கை. ஏட்டறிவு மூட நம்பிக்கையை எழுப்ப வல்லது. ஏட்டறிவுக்கு சிறப்புண்டு. அச்சிறப்பை எட்டியவர் சில சமயம் எவராலும் முடியாததை செய்து முடிக்கும் அறிவு பெற்றவராவார். சர்க்கார் அவசரச் சட்டம் அரசியல் காரணங்கட்காகப் போட்டு விட்டது. நாட்டில் அவசரமில்லை. அதன்படி இரண்டு அல்லது மூன்று அரசியல் கட்சிகள் பாதிக்கப்பட்டன. அவர்களில் ஒருவர் Bar-at-Law. அவர் பேப்பரில் கவர்னர் வேட்டைக்குப் போவதைக் கண்டார். ஹைகோர்ட்டில் அவசரச் சட்டம் செல்லாது என மனுப் போட்டார். சர்க்கார் திகிலடைந்து விட்டது. கவர்னர் வேட்டைக்குப் போவதை ரத்து செய்தார். அவசரச் சட்டம் என்னாவது? யாரோ ஒருவர் பேப்பரில் வந்த செய்தி தவறு கவர்னர் மாளிகையிலிருந்து வரவில்லை எனக் கூறலாம் என்றார். எந்த சர்க்கார் இலாக்காவிலும் வேலைகள் வழக்கப்படி நடக்கும். எவரும் சட்டம் எது, அதற்கு அடிப்படையான Act எது, எந்த அரசியல் நிர்ணய உரிமையின் அடிப்படையில் இந்த Act வருகிறது. Rule யார் போட்டது. சட்டப்படி செல்லுமா? Ruleக்கு கீழே Government order படி போடப்பட்டதா என யோசிப்பதில்லை. ஓரிருவர் அப்படியிருப்பார்கள். ஒரு சமயம் ரூபாய் 28,000 பத்திர செலவில் ஒரு கிரயம் ரிஜிஸ்டர் செய்ய வேண்டியதாயிற்று. 28,000 ரூபாய் அன்று பெரிய தொகை. சொத்தை ரூபாய் 55,000க்கு வாங்கினார்கள். ஐந்து வருஷத்தில் கிரய செலவு ரூபாய் 28,000 ஆயிற்று. நுணுக்கமான ஆபீசர் ஒருவர் ஓய்வு பெற்றவர். இந்த சொத்தை கிரயம் செய்ய பத்திர செலவு தேவையில்லை. Registration fees 1000 ரூபாய் கொடுத்தால் போதும் என்றார். அதுவும் ஏட்டறிவாகும்.

அன்பர் அன்னையை ஏற்றவர். ஏற்றவர் வழிபடும் தெய்வமாக ஏற்றவர். அதைக் கடந்து அம்சங்களுடையவரின் ஒரு அம்சத்தை அறிந்து மனப்பூர்வமாக அதற்காக ஏற்றவர், எதுவும் புரியாமல் எல்லாம் அறியும் ஆன்மீக அம்சம் உடையவர், அந்த அம்சத்தில் அன்னையை ஏற்றவர், அரை நிமிஷத்தில் உயிர் போகும் நிலையில் திகைத்து நின்றபொழுது அழைக்காமல் வந்து ஆபத்தை விலக்கியதால் அன்னை நெஞ்சுக்குரியவரானவர், நினைத்தால் நெஞ்சு இனிப்பதால், நெஞ்சம் அவரை மறக்காதவர் எனப் பலவகையாக அன்னையை மக்கள் ஏற்கின்றனர். Agenda வில் – “என்னை விரும்புபவர்க்கு நான் அளிக்கும் பரிசு Agenda – அன்னை ஏராளமான அனுபவங்களைக் கூறுகிறார். அதில் ஒன்று. பெரும் அனுபவம் எழும் நேரம் *“As you will” — “உங்களிஷ்டம்”* எனக் கூறுவது அவர் வழக்கம் என்கிறார். அன்பர்கள் படிப்பதை பயில்பவரும் உண்டு, மறப்பவரும் உண்டு, பயில்பவர் ஒருவர் இதை முக்கியமாகக் கருதினால் பயின்றால் தவறாது பலன் வருவதைக் காண்பார். அன்னை கூறுபவை மகத்தானவை என்பதால் மனத்தில் நிற்பதில்லை. ஒருவர் மனதில் இது நின்றால் அவருக்கு அதன் விசேஷத்தை அறியும் நேரம் தவறாது வரும். அவர் தன் கிராமத்திற்குப் போய்

நுழையும் பொழுது ஒரே அமளியாக இருப்பதை இது பழைய சண்டை என்று புரிந்து கொள்ளும் நேரம் “10 நாளாக வர்மம் தலைதூக்கியிருக்கிறது. ஊர் இரண்டாயிற்று. எதிர்கட்சி வீட்டை எரிக்க தீவிரம் அதிகமாக இருக்கிறது. எவர் செய்தாலும் அனைவரும் அழிவர்” என்ற செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டவருக்கு *As you Will* என்ற சொல் எழுந்து உள்ளே போனால், நிலைமை படிப்படியாக மாறி அன்று மாலை எல்லாம் அடங்குவதைக் காண்பார். *As you Will திருவுள்ளம் பலிக்கட்டும்* என்பதன் பவரை அவர் கண்டபின் மனம் மறக்காது. மறந்ததாகத் தோன்றினாலும் மனிதன் புத்துயிர் பெற்று புது வாழ்வு பெறுவான். இது அன்னையின் ஏட்டறிவு. அன்னையை இது போல் அறியும் வகைகள் பல. எந்த வகையாக அறிந்தாலும் அதன் பலன் பரிணாம பவர். அதாவது உலகில் ஏட்டறிவுக்கு அனுபவ அறிவின் திறன் இந்த அம்சத்தில் வரும். அது அன்னையின் முத்திரை. காமராஜ் படிக்காதவர். ராஜாஜி வக்கீல் பெரும் புத்திசாலி எனப் பெயர் வாங்கியவர். 1942ல் ராஜாஜி உலகப் போர் விஷயமாக பகவான் ஸ்ரீ அரவிந்தர் அபிப்பிராயத்தைக் கொண்டார். இருவரும் தனித்தனியே அந்த முடிவுக்கு வந்தனர். பகவான் வரும் முடிவுகளை தானே தன் அறிவால் அடையும் புத்திசாலித்தனமுள்ளவர் ராஜாஜி. 1930 முதல் இங்கிலாந்து அரசியல்வாதிகள் பலமுறை காங்கிரஸ் தலைவர்களை சந்திக்க வந்தனர். காங்கிரஸ் குழுவில் ராஜாஜி ஏதோ ஓரளவில் எப்பொழுதுமிருப்பார். சுமார் 10 குழுக்களில் தலைவர்கள் போகும்பொழுது “Rajagopalachari is the only stateman in India” என்று கூறினார். அரசியல்வாதி கட்சி நலனுக்காக உழைப்பவர். Statesmanஎன்பவர் நாட்டு நலனுக்காகப் பாடுபடுபவர். நேருவுக்கோ காந்திஜிக்கோ அப்பெயர் கிடைத்ததில்லை. தமிழர், வைஷ்ணவர், அறிவின் சிகரம், எக்கருத்தையும் அதன் மூலத்தைக் கொண்டு அறியும் திறன் பெற்றவர். அது ஏட்டறிவு. “1942, 1943 வரை ராஜாஜியே என் வாரிசு” என்றார் காந்திஜி. அதன் பிறகு நேரே அந்த ஸ்தானம் நேருவுக்குப் போயிற்று. ராஜாஜிக்கு எலக்ஷன் இராசியில்லை. அவர் இந்தியாவின் முதன் பிரதமராக வேண்டியவர். குறைந்தபட்சம் தன் வாழ்நாள் முழுவதும் ஸ்டாலின் போல, சுகர்ணா போல் இந்திய ஜனாதிபதியாக இருந்திருக்க வேண்டியவர். நேரு அதைச் செய்ய விரும்பினார். உடனிருந்த பெரும் தலைவர்கள் அனைவருக்கும் ராஜாஜி மீது பெரிய மதிப்பு. மதிப்பு வேறு, பிரியம் வேறு. நேரு தலைவர்களிடம் முதல் ஜனாதிபதிக்காக ராஜாஜியின் பெயரைக் கூறினால் அவர்கள் “அப்பெயரையே சொல்லாதீர்கள்” என்றதால் அவர் கவர்னர் ஜெனரலானார். ஜனாதிபதியாகவில்லை. இது ஏட்டறிவின் அம்சம். ஏட்டறிவு பெரியது. ஆனால் பகுதியானது. பகுதி முழுமையை எட்டினால் தலைகீழே மாறும் என்பது சட்டம். ராஜாஜி விஷயத்தில் அது பலித்தது. காமராஜ் படிக்காதவர் அனுபவத்தால் மட்டும் அறிவு பெற்றவர். அவர் முதன் மந்திரியாக இருந்தபொழுது சென்னை கடற்கரைக் கூட்டத்தில் ராஜாஜி அவருக்கு 60 ஆம் ஆண்டு நிறைவில் மாலையிட்டு வாழ்த்தி பிரபலமான முதல்வர் என்பர். நாட்டின் இரண்டு பிரதமர்களை தேர்ந்தெடுத்த பவர் அனுபவ அறிவுக்குண்டு.

மூலம் : ஸ்ரீ கர்மயோகி<br>
சொற்பொழிவாற்றியவர் : திரு. ரத்தினவேலு<br>
சொற்பொழிவாற்றிய தேதி : 10.01.16